# இன்று புனித வெள்ளி

*திருவழிப்பாட்டு ஆண்டு B (03-04-2015)*

***திருப்பலி முன்னுரை - 1***

அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அறிவிக்கிறீர்கள். நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக. அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று புனித வெள்ளி. நம் ஆண்டவர் இயேசுவின், பாடுகள், மரணம் ஆகியவற்றை இன்று நாம் நினைவு கூருகின்றோம். இயேசு நமக்காகச் சிலுவைச் சாவை ஏற்று மரணித்த நாள், நாம் வாழ்வுபெற தன் வாழ்வையே கொடுத்த நாள். நமது துரோகத் தனங்களுக்காக அவமானத்தையும், வேதனை களையும், அனுபவித்த நாள். நம் குற்றங்களுக்காகக் காயமடைந்த நாள், நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்ட நாள், நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்ட நாள். பாவத்தின் விளைவு மரணம். அதிலும் இறைமகன் இயேசுவின் பாடுகளும், வேதனைகளும் நிறைந்த சிலுவை மரணம் பாவத்தின் கொடூரத்தை உலகிற்கு பகிரங்கமாய் காட்டுகின்றது. நாமும் நம் பாவங்களுக்காய் இறப்போம். அப்போதுதான் எங்கும் பாவம் வலுவிழந்து வீழ்ந்து போகும். எனவே இறைவனின் வார்த்தையைக் கேட்டு இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றில் நம் மனம் பதித்து மனமாற்றம் அடைவோம் நம் வாழ்வில் புனிதம் பெறுவோம்.

**www.tamilcatholicnews.com**